**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கமுதி.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர். கமுதி**
**2026 ம் வருடம் மார்ச் திங்கள் 06 ம் நாள் சனிக்கிழமை**

குற்றவியல் பல்வகை மனு எண். 94/2026
சி.சி. எண். 380/2022
சி.பி. எண்.55/2019

சரவணக்குமார் (33/19),
த/பெ. செல்லச்சாமி,
3/111, வடக்குத்தெரு,
தொட்டியபட்டி,
கோவிலாங்குளம், கமுதி தாலுகா,
இராமநாதபுரம் மாவட்டம். ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/ இடையே/

தமிழக அரசுக்காக
சார்பு ஆய்வாளர் ,
கோவிலாங்குளம் காவல் நிலையம்
இராமநாதபுரம் மாவட்டம்.
குற்ற எண்.31/2019
U/s. 379 IPC ... குற்ற முறையீட்டாளர்

இம்மனுவின் மீதான இறுதி விசாரணை 06.03.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்.திரு. L. வேலவன், B.Com(CA)., B.L., அவர்கள் ஆஜராகி வாதிட்டதின் பேரில் இவர் வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், மனு சங்கதிகளை ஆராய்ந்தும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று (06.03.2026) இந்நீதிமன்றம் வழங்கிடும்......

உ்த்தரவு

1. இம்மனுவானது பிரிவு 497 & 503 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வழக்கு சொத்தான SONALIKA INTERNATIONAL என்ற TN–65–AX–8643 என்ற எண் கொண்ட டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனத்தை ஒப்படைக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. கோவிலாங்குளம் காவல்நிலைய குற்ற எண். 31/2019 ன் வழக்கின் புலன்விசாரணை முடிக்கப்பட்டு, குற்ற இறுதியறிக்கை இந்நீதிமன்றத்தில்

THANGA KARTHIKA

EX P5 marked through PW2
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.06 13:13:17 +0530

தாக்கல் செய்யப்பட்டு வழக்கானது சி.சி.எண்.380/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி ஆஜரான நிலையில் எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுகள் வனைய வாய்த ஏற்பட்டிருந்த நிலையில் எதிரி மீது U/s. 379IPC ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவிய போது எதிரி அவர் மீதான குற்றத்தை தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தி இந்நீதிமன்றத்தில் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது.

3. மனுதாரர்/எதிரி கோவிலாங்குளம் காவல் நிலைய குற்ற எண். 31/2019 ல் உள்ள SONALIKA INTERNATIONAL என்ற TN-65-AX-8643 என்ற எண் கொண்ட டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனத்தில் மனுதாரர்/எதிரி மேற்படி டிராக்டரில் மணல் அள்ளியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு சி.சிஎண். 380/2022 ஆக நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.03.2026 ம் தேதி எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டு வழக்கானது Admission ல் முடிக்கப்பட்டுவிட்டது என்றும், மேற்படி வழக்குச் சொத்தாது மனுதாரர்/எதிரிக்கு சொந்தமானது என்றும், மேற்படி வழக்குச் சொத்தின் Chasis no.LZCST699480S3, Engine No. 31021L73K692276F5 என்றும், மேற்படி வழக்கு சொத்தான SONALIKA INTERNATIONAL என்ற TN-65-AX-8643 என்ற எண் கொண்ட டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனம் குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டு காவல் துறை வசம் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கு சொத்தான டிராக்டருடன் கூடிய டிரைலர் வானத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்து தன்னிடம் வழங்கும் பட்சத்தில் அதை விற்கவோ, மாற்றம் செய்யவோ மாட்டார் என்றும், மேற்படி நீதிமன்றம் விதிக்கும் எந்த ஒரு நிபந்தனையையும் ஏற்க தயாராக உள்ளார் என்றும், மேற்படி மனுதாரர்/எதிரிக்கு சொந்தமான டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனத்தின் ஆர்.சி புக் ஜெராக்ஸ் நகல் இத்துடன் இணைத்துள்ளதாகவும், மேற்படி வழக்கு சொத்தானது காவல் நிலையத்தில் இருந்து வரும் பட்சத்தில் அது பழுதாகி விடுவதுடன் அதை பயன்படுத்த முடியாமல் போய்விடும் என்றும், மனுதாரர்/எதிரிக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்றும், மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர் / எதிரிக்கு

THANGA KARTHIKA
EX P5 marked through PW2
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.06 13:13:29 +0530

வழங்கும் பட்சத்தில் போதுமான பிணையம் அளிக்க தயாராக உள்ளார் என்றும், மனுதாரர்/எதிரிக்கு சொந்தமான டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனத்தை மனுதாரர்/எதிரிக்கு ஒப்படைக்கக் கோரி மனுதாரர்/எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

4. காவல் துறையினர் பதில் மனுவில் இவ்வழக்கில் கடந்த 25.05.2019ம் தேதி இரவு 19.00 மணிக்கு வழக்கின் புகார்தாரர் கோவிலாங்குளம் குரூப் கிராம நிர்வாக அலுவலர் திரு. எம். பிரேம் ஆனந்த் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கோவிலாங்குளம் குரூப் எல்லைக்கு உட்பட்ட நெறிஞ்சிப்பட்டி கிராமத்தில் உள்ள ஆற்றுப்படுகையில் 25.05.2019ம் தேதி மாலை 06.00 மணியளவில் திருட்டுத்தனமாக மணல் அள்ளுவதாக கிடைத்த தனவலின் பெயரில் புகார்தாரரும் அவரது கிராம உதவியாளர் திரு. உக்கிரபாண்டி என்பவரும் சென்று பார்த்த பொழுது திருட்டுதனமாக மணல் ஏற்றி வந்த டிராக்டரை மறித்து நிறுத்திய பொழுது பின்பு கேட்டுத்தெரியப்பட்ட தொட்டியபட்டி கிராமத்தைச் சேர்ந்த மனுதாரர்/எதிரி சரவணக்குமார் என்பவர் ஓடிவிட்டதாகவும், பின்பு அதே இடத்தில் டிராக்டருக்கு பாதுகாப்பாக உதவியாளரை இருக்க வைத்து விட்டு வண்டியை சோதித்த பொழுது வண்டி எண் முழுமை பெறாமல் TN 65 AX என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும், பின்னர் வண்டியின் பெயர் சோனாலிகா Engine No. 31021L73K692276F5, Chasis no.LZCST699480S3 கொண்ட டிராக்டரின் பின்னால் இருந்த டிரெய்லரில் முழுவதுமாக திருட்டு மணல் இருப்பதை உறுதி செய்ததாகவும், பின்பு கோவிலாங்குளம் காவல் நிலையம் வந்து அனுமதியின்றியும் இலாப நோக்குடனும் சட்டவிரோதமாக மணல் திருடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனுவை பெற்று கோவிலாங்குளம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்பவரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு குற்றமுறையிடுவோரால் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு மேற்படி வாகனம் காவல் நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதாலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைத்தால் வாகனத்தை வேறு நபர்களுக்கு விற்பனை செய்து விடக்கூடும் என்பதாலும்,

EX P5 marked through PW2

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.06 13:13:36 +0530

மீண்டும் இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுத்தக்கூடும் என்பதாலும், வானத்தின் நிறத்தை மாற்றக்கூடும் என்பதாலும், மனுதாரர்/ எதிரியிடம் மேற்படி வாகனத்தை ஒப்படைப்பதற்கு கடுமையான ஆட்சேபணை தெரிவித்துள்ளார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

5. மனு, பதில் மனு மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டத்தில் இவ்வழக்கில் மணல் திருடியவர்கள் மீது குற்றமுறையீடுவோரால் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சி.பி.எண்.55/2019 ல் ஒப்படைக்கப்பட்டு காவல் நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதாலும், இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் சி.சி.எண்.380/2022 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் கடந்த 03.03.2026 ம் தேதியன்று மனுதாரர்/எதிரி தன்னிச்சையாக குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் செலுத்தி வழக்கு கோப்பு முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்/எதிரியானவருக்கு இது முதல் குற்றம் என்பதும், எதிரியானவர் வேறு குற்ற வழக்கில் ஈடுபடவில்லை என்பதும் தெரிய வருவதாலும், மேற்படி வழக்கு சொத்தானது வேறு ஏதேனும் குற்றச்செயல்களில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதையும் கருத்தில் கொண்டும், மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர்/எதிரிக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க RC book நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாலும், மேற்படி வழக்குச் சொத்தான SONALIKA INTERNATIONAL என்ற TN–65–AX–8643 என்ற எண் கொண்ட டிராக்டர் மற்றும் டிரைலர் வாகனத்தை அதன் உரிமையாளரான மனுதாரர்/எதிரி வசம் ஒப்படைப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு (06.03.2026) இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

EX P5 marked through PW2

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.03.06 13:13:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.